**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண் : 108/2018**
**நாள் : 01/09/2023, வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வசந்தகுமார் | த/பெயர் - சண்முகம் |
| வயது - 29 | தொழில் - ஓட்டுநர் |
| விலாசம் - காமராஜர் தெரு, பெரிய காலனி, பெருங்காவூர் கிராமம், விச்சூர் அஞ்சல், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (PW1)**

பிரதிவாதியின் அனுமதியின்பேரில் தான் தாவா சொத்தில் வசிக்கிறீர்களா என்றால் இல்லை அல்லது பிரதிவாதியின் எதிரிப்பின் அடிப்படையில் தாவா சொத்தில் வசிக்கிறீர்களா என்றால் ஆமாம். 2001ல் தாவா சொத்தில் தங்கள் தகப்பனார் ஓலை குடிசை கட்டியதாக கூறுவது உண்மையா என்று கேட்டால் உண்மைதான். அதற்கு ஆவணம் உள்ளதா என்று கேட்டால் வரி ரசீது உள்ளது. வாதுரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு முரணானது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 முதல் 12 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் குடியிருந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் தாவா சொத்தில் இருக்கும் அனுபவத்தை காலிசெய்து காலிசுவாதீனத்தை பிரதிவாதியிடம் ஒப்டைக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை சட்டத்திற்கு புறம்பாக உண்மையை மறைத்து தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**